உ

வெற்றிவேலுற்றதுணை

மஹாகவியாகிய ஒட்டக்கூத்தராற்
சொல்லப்பட்ட

# இட்டியெழுபது.

இஃது
பட்டாம்பாக்கஞ்சுப்பராயவையரால்
உரைசெய்யப்பட்டு
சவலை · சுப்பராயமுதலியாரும்
வெ · பொன்னையாமுதலியாரும்
கேட்டுக்கொண்டபடி

புதுவை
க · சுப்பராயமுதலியாராற்
கண்ணோட்டத்துடனாராயப்பட்டுத்
தமது
பாரதிவிலாசவச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது

---

சாலிவாகனசகாப்தம் ௲௭௱௬௯
பிலவங்க௵ ஐ · வி௸ · ௴ ௧

வெற்றிவேலுற்றதுணை

# சிறப்புப்பாயிரம்.

உலகெலாந்தந்த · வுமையொருபாக · ※
னிலகுநன் னுதலெழீஇ · யெரிசுடர் விழிப்
யாறொருகூறு · யீறில்பேராற்ற [பொறி
லாநநமிருமூன் · றுனெனுமுறைபெறீஇ ※
மிளிர்சரவணபவன் · கிளர்புயவீர · · ※
வாகுதேவாதி · யாருமொன்பதின்ம · ※
ரிணையறுபூதக் · கணமொடுசென்றே · ※
ரிடும்பையிலமரர்க் · கடும்பகையாஞ்சூர் ※
முதறடிந்தும்பர் · பதிசசிமணாளற் · · ※
கருளுபுதேவகுஞ் · சரிமணம்புணர்ந்தோ ※
னொல்லையிலாட · னல்லுலகாடுபு · · ※
பாமகடலைவன் · மாமகள்கொழுந · · ※
னதியோர்வழுத்த · சோதியார்கந்த · · ※
மலைமிசைநிலீஇய · கலைநிறைபுலவன் · ※

 சிறப்புப்பாயிரம்.

றன்னருள்சுட்டிப் · பின்னிகல்வல்லன் · ❊
மநுவழிவந்த · தநுவினனுமுசு · · · ❊
குந்தனின்றுற்று · மந்தமிறவத்திற் · · ❊
கிதயமதருகி · நிதியருள்பெருகி · · ❊
வந்துபோர்கண்டசெங்குந்தரொன்பானே
வீரரையவன்படை · வீரராத்தரவவர் [னும்
கோவில்மங்கையர்க்குக் · காவலராகி · ❊
யெட்டுத்திக்குள · மட்டறுமடையலர் · ❊
போரில்வென்கண்ட · சீரியராயமர்ந் · ❊
தான்றபேராற்ற · லென்றகுந்தரராங் · ❊
குமரனாத்தரவவர் · நிமிர்திறலென்னு [கிட்
டொன்னச்செய்யுள்கடை · நலன்னிப்புரிந்
டோவாச்செல்வ · மேவாத்தகைபெறாஉ ஞ்
சர்ந்தமார்பருமர்செங் · குந்தர்வண்புகழ்நில
மெங்குநிக் குளிர்தரத் · தங்குலத்தாயிர ஞ் ❊
கிரமறுத்தாசநற் · தனாயிவிட்டொப்பிலா ❊
வமிழ்ந்ளிற்சுவைதருஉ ந் · தமிழ்நெறிபுலவரா
மரசராக்கரசனு · வுனாசெய் செல்வியுமகி
தேத்திடுமொட்டக் · கூத்தனையிருத்தி · [ழ்ந்

யவன் றிருவாயா · னவந்தரக்கேட்ட · ❊
வீட்டிபெருபதென · நாட்டுபிரபந்தங் ❊
சற்றவர்மற்றய · ருற்றெளிதறிதர · · ❊
வியற்றமிழுணாயார்க் · குயிற்றித்தருகென ❊
வதுவைநீங்காத · புதுவையாமமரர் · ❊
பதியினல்லொழுக்கந் · துதிபெறக் கிளைத்து
சந்தயார்கல்விச் · செந்தளிர்தளிர்த்தே [ச்
ரியலிலக்கியமெனு · நயமலர்பூத்துத் · ❊
திசைபலவுஞ்செல · விசைமணம்வீசிச் · ❊
சுவைதருமின்சொன் · னவநறவந்துளித் · ❊
துலகுணக்கொடைக்கனியிலகுறப்பழுத்தே
யின்புறநண்பர்க் · கன்பெனுநிழறந் · ❊
தற்புதத்துயர்ந்த · கற்பகத்தாரு · · · ❊
சுந்தரமமைந்தசெவ் · குந்தநம்மரபில் · ❊
வந்தத்தரிக்கிடந் · தந்தசுந்தரனருண் · [ஞ்
முருகனம்போருகச்சரணம்வாய்நெஞ்சின
வள்ளலெனவுனைக்கும் · வெள்ளைமுத்தெந்திர
மாதவத்துறித்த · வாதவனருந்த · · · [ன்
மெல்லையபாற்செழும் · பொன்னையபூபன்

வெற்றிவேலுற்றதுணை

# சிறப்புப்பாயிரம்.

உலகெலாந்தந்த · வுமையொருபாக ❋
னிலகுநன் னுதலெழீஇ · யெரிசுடர்விழிப் }
யாறொருகூறு · மீறில்பேராற்ற [பொறி }
லாறநமிருமுன் · றுனெனுமுறைபெறீஇ ❋
யிளிர்சரவணபவன் · கிளர்புயவீர · · ❋
வாகுதேவாதி · யாருமொன்பதின்ம · ❋
ரிணையறுபூதக் · கணமொடுசென்றே · ❋
ரிடும்பையிலமரர்க் · கடும்பகையாஞ்சூர் ❋
முதறடிந்தும்பர் · பதிசமைத்த · · ❋
கருணைபுதேவருஞ் · சரிமணம்புணர்ந்தோ ❋
னொவ்வேயிலாட · னல்லில்காடுபு · · ❋
பாமகடலைவன் · மாமகள்கொழுந · · ❋
னதியோர்வழுத்த · சோதியார்கத்த · · ❋
மலைமிசைநிலைஇய · கலைநிறைபுலவன் · ❋

(உ) சிறப்புப்பாயிரம்.

றன்னருள் சுட்டிப் · பின்னிகல்வல்லன் · ❊
மநுவழிவந்த · தநுவினனுமுசு · · · ❊
குந்தனின்றுற்று · மந்தமிறவத்திற் · · ❊
கிதயமதருகி · நிதியருள்பெருகி · · ❊
வந்துபோர்கண்டசெங்குந்தரோன்பானே
வீரரையவன்படை · வீரராத்தரவர் [னும்
கோவில்மங்கையர்க்குக் · காவலராகி · ❊
யெட்டுத்திக்குள · மட்டறுமடையலர் · ❊
போரில்வென்கண்ட · சீரியராயமர்ந் · ❊
தான்றபோராற்ற · லென்றசுந்தரராங் · ❊
குமாரனாத்தரவர் · நிமிர்திறலென்று [திட்
டொன்னனச்செங்குள்கடை · நன்னனிப்புரிந்
டோவாச்செல்வ · மேவாத்தகைபெறாஉஞ்
சந்தமாரியருமர்செங் · குந்தர்வண்புகழ்நில
மெங்குநின்றொளிர்தரத் · தங்குலத்தாயிரஞ் ❊
சிரமறுத்தாசநந் · தனையீவிட்டொப்பிலா ❊
வமிழ்தினிற்சுவைதருஉந் · தமிழ்தெரிபுலவரா
மரசராக்கரசனு · வுனைசெய் சென்னியுமகி
தேத்திடுமொட்டக் · கூத்தனையிருத்தி · [ழ்ந்

யவன்றிருவாயா · னவந்தரக்கேட்ட • ❋
ஈட்டியெழுபதென · நாட்டுபிரபந்தங் ❋
சற்றவர்மற்றய · ருற்றெளிதறிதர • • ❋
வியற்றமிழுணர்யார்க் · குயிற்றித்தருகென ❋
வதுவைநீங்காத · புதுவையாமமரர் • ❋
பதியினல்லொழுக்கந் · துதிபெறக்கிளைத்து
சந்தமார்கல்விச் · செந்தளிர்தளிர்த்தே [ச்
ரியவிலக்கியமெனு · நயமலர்பூத்துத் • ❋
திசைபலவுஞ்செல · விசைமணம்வீசிச் • ❋
சுவைதருமின்சொ · லனவநறவந்துளித் • ❋
துலகுணக்கொடைக்கனி யிலகுறப்பழுத்தே
யின்புறநண்பர்க் · கன்பெனுநிழறந் • ❋
தற்புதத்துயர்ந்த · கற்பகத்தாரு • • • ❋
சுந்தரமமைந்தசெவ் · குந்தநன்மரபில் • ❋
வந்தத்தரிக்கிடந் · தந்தசங்கரனருண் • [ரே
முருகனம்பொருகச் சரணம்வாய்ந்தெருஞ்சின
வள்ளிலினைவளைக் கும் · வெள்ளைமுத்தேத்திர
மாதவத்துறித்த · வாதவனருந்த • • - [ன்
மென்மையரல்செகளும் · பொன்னைய பூபன்

நல்லப்பனென்னுஞ் · செல்லொக்கும் வண்
முதல்வனுதவிய · புதல்வனெனமரீஇத் [கை
திக்கனைத்தும்புகழ்ச் · சக்கரநாடாத்தும் · ❊
ஒப்பிலாச்சவலைச் · சுப்பராயக்கோ · ❊
வம்பரும்புகழும் · அம்புவித்தோன்ற · ❊
லரிதினிற்பயந்த · கணையில்சீர்க்காளை · ❊
யொப்பாருமில்லா · அப்பாவுகுரிசிற் · ❊
பிள்ளைவண்டார்தொடைப்பள்ளிகொண்டா
பங்கயமுகம்பார்மங்கையரிரந்தோர் } ன்சு
முத்தையதாவெனுமுத்தையகோமான் } தன்
மட்டறுபுகழினன் · குட்டபநரபதி · · ❊
யருந்தவப்பயனெனப் · பெருந்தலமுதித்த
பூண்டவிராதனி · தாண்டவராயவே · ❊
ளிப்புவியெலாம்புகழ் · சுப்பராயன்செயு ❊
நன்னிலைவந்த · செந்நிலையுடைய · · ❊
அன்னமலையெனு · நன்னுநாமத்தன் ❊
றனைநார்க்கோளினர் · வினைதீர்தான்றிருத்
தோன்றலெனவந்த · வான்றமிழ்வல்ல · ❊
விராமதாபரனெனு · மிராமசாமிப்பதி · ❊

பொன்னாத்தருங்கைச் · சின்னாத்தைதந்த
சிவசங்கரிக்காள் · சிவசங்கரக்கோ
வருணனில்விளங்கும் அருணாசலன் றருங்கோ
குழந்தையென் றுதித்தகுழந்தையென்பெய
னாவனுமொன்பதின்மரு · னுவன்றாராகத்
திசைபலவற்றினு · மிசைபிரபந்த
மாயிரமமைத்ததின் · மீயுயர்பொருளின்
வழுக்களைந்தான்ற · விழுப்பொருளாக
வங்கையினெல்லிச் · செங்கனியென்ன
வியற்றினனாணை பெருங்கயற்றிரளெழுந்து
மழைதலைச்சுமந்த · தழைகமுகின்குலை
யுகுத்தரவிந்த · நகைத்துணருறங்கு
மணிநீர்வளத்த · வணிநீர்ப்பெண்ணை
நதிபுறநாடுடுத்த · நிதிபெறுபட்டாம்
பாக்கத்தெழிறரு · மாக்கடுதிக்குஞ்
சிதம்பரமுகிலரு · ளிதம்பன்
வாய்மைசேர்சுப்பராயநாவலனே

இஃது

புதுவை க, சுப்பராயமுதலியாராற்
சொல்லப்பட்டது.

## தருமபுரவாதீனம்

## சோமசுந்தரக்கவிராயராற்

## சொல்லப்பட்டது

சீரார்பொன்னையன்முனந் திணையமு
தைப்புலவருணச்செய்தல்போலிப், பாரா
ரடபுதுவையில்வாழ் பொன்னையமாலீட்டி
யெழுபதெனும்வரி, நேராருமுணையமுதை
யெழிற்பட்டாம்பாகைமகிழ் நிபுண மிக்
க, பேராருஞ்சுப்பராயக்கவியாமந்த்ரத்தா
ற்பெறச்செய்தானே. . . . . . . ❋

முற்றிற்று.

உ

வெற்றிவேலுற்றதுணை

# ஈட்டியெழுபது.

## மூலமும் · உரையும்

### கடவுள்வாழ்த்து

நாட்டிலுயர்செங்குந்த நாயகர்மீதிற்சிறந்த, ஈட்டியெழுபதினைப்பாடக்கோட்டிற், பருமாவரையதனிற் பாரதநூறீட்டுங், கரிமாமுகன் கழலே காப்பு.

என்பது. இச்செய்யுள்மேலெடுத்துக்கொள்ளுங் காப்பியமினிது முடியும்பொருட்டுக்கடவுள்வாழ்த்துக் கூறுகின்றது.

இதன் பொருள்

உலகத்தி லுள்ளாராற் றுதிக்கப்பட்டு

ன்றமேலானபுகழையுடைய செங்குந்தத்
தலைவர்கண்மீது பலசிறப்புகளுமமைந்த
இட்டியெழுபதென்னும்பிரபந்தத்தையா
ன்பாடத்தனதொருகொம்பினாற்பருத்துய
ர்ந்தமேருமலையிற் பாரதநூலையெழுதிவை
த்த அழகிய யானைமுக விநாயகக்கடவுளின
து திருவடிகளே துணையாகுமென்றவாறு.

நாடென்ப துலகத்தின் மேற்றுயிற்று.
நாட்டிலுயர் செங்குந்தரெனவே உலகத்
திலுள்ளாராற்றுதிக்கப்படுகின்ற மேலான
புகழையுடையவென வருவிக்கப்பட்டது.
ஒருவராலுமெழுதற்கரிய மகாபாரதத்தை
த் தனதொரு கொம்பினலெழுதி நிறை
த்த கடவுளென விசேடித்தமையால் இக்
காப்பியமுங் குறைவின்றி நிறையுமென்ப
து கருத்து.

### பாயிரம்

பூவார்புவனையிற் சோமன்றரும்பழி போ
னபின்ன நாவணர்போற்றிய நாடகங் கே

ட்பநலமுடனே யாவணர் செங்குந்தரா
யிரத்தெண்டலை கொய்திரத்தப் பாவாடை
யிட்ட துலகமெல்லாம்புகழ் பாவித்ததே.
இ - ள் ஆவூரில் - நலமானசெல்வத்தோ
டுவாழுகின்றவராகிய செங்குந்தத் தலைவர்
கள்புலவர்களாற் போற்றப்படுகின்ற இட்
டி யெழுபதென்னும் பிரபந்தத்தை ஒ
ட்டக்கூத்தனென்னும் புலவராற் கேட்கவி
ரும்பித் தன்மரபைத்தான்புகழ்தல் குற்ற
மெனமறுத்தவவனைக் கொலைசெய்யத்து
ரத்திப் போனபோது அப்புலவர் மகால
ட்சுமிவீற்றிருக்கின்ற செந்தாமரைமலர்க
ணிறைந்த தடாகங்களாற் சூழப்பட்ட புவ
னையென்னும்பட்டினத்தில் சோமாசியா
ண்டானென்னுமோரந்தணன் வீட்டிலடை
க்கலம்புக அவ்வந்தணன்புலவனைக்காப்பா
ற்றநிமித்தந் தனதொருபிள்ளையைபுமோ
ருபெட்டியில்வைத்துக் கொடுக்க அதைக்
காட்டிற்கொண்டுபோய்த் திறந்துபார்த்

அப்புலவரல்லாமையின் பிரமகத்திக்கஞ்சி அப்பழியைவிட்டுநீங்கினபின்புஅப்புலவர துசம்மதியில் தங்குலத்தா யிரத்தெண்மர துதலைகளைவெட்டி இரத்தப்பாவாடையிட் டதின்மீது புலவரிருந்து பிரபந்தத்தைச் சொல்லக்கேட்டு மகிழ்ந்தபுகழ் உலகமெ ல்லாம் பெருகிய தென்றவாறு.

பூவார்புவனை யெனவே தடாகங்க ளிற்றாமரை மலர்வதுந் தாமரை மலரிலில க்குமியிருப்பது மியல்பாதலின் இலக்குமியு ந்தடாகங்களுமவருவிக்கப்பட்டது. ஒட்ட க்கூத்தனென்னும் புலவர் செங்குந்தர்மர பென்பதும் தன்மரபைத்தான் புகழ்தல் கு ற்றமென மறுத்தல் முறைமையென்ப தும் பின்னுமவரை பலாத்காரஞ்செய்ததி ன்மேல்தன்னைப்பாதுகாக்கு நிமித்தஞ்சோ மாசியாண்டார்வீட்டிலடைக்கலம்புகுந்தா ரென்பதும் அச்சோமாசியாண்டாரவரை க்காப்பாற்றத்தன தொருபிள்ளையும் பலி

லாசக்கொடுத்தாரென்பதும் பழிக்கஞ்சிய
வர்விடுத்தாரென்பதுந் தோன்ற சோமன்
றரும்பழி போனபின்பென்றார். செங்கு
ந்தர்மரபினது பெருமையுமம்மரபைப்
புகழ்ந்த ஒட்டக்கூத்தரது கல்வித்திறனுந்
தோன்றநாவாணர்போற்றிய நாடகமென்
றார் ஆவூரிலரசச்செல்வத்தோடுவாழ்ந்தன
னென்பது தோன்ற நலமுடனேயாவாண
னென்றார்வாழுநர்வாணனெனத் திரிந்துநின்
றது. செங்குந்தரதுவீரத்தன்மையும் நூலி
னதருமையுமந்நூல்செய்த புலவரதுபெரு
மையுந்தோன்ற. ஆயிரத்தெண்டலை கொ
ய்திரத்தப்பாவாடையிட்டதென்றார் அத்த
லைகளியாவும பின்னுயிர்பெற்றெழுந்ததெ
ன்பதுதோன்ற உலகமெல்லாம் புகழ்பா
வித்ததென்றார்.

பூதலம்வாழ்சூருந்தம் பொலிவுடன்வி
ளங்கநான்கு, வேதமெந்நாளுமோங்கவே

நியர்பசுக்களபலிக, மாதவன்வளவன்செங் கோல் வளமைகுன்றுதுநிற்க, வேர்தமே யறைடம்பொன்னி யுறந்தையுஞ் சிறக்க மாதோ. (க)

இ-ள் மழைவளமுஞ் செந்நென்முதலி ய பயிர்வளமும் பொன்மணி முதலியநிதி வளமும் பெருகி யுலகமேன்மேலும் வாழ் ந்திருக்கச் சங்கு நத்தலைவர்கள நீடூழிகாலம் பொலிவுபெற்று விளங்கியிருக்க இருக்கு முதலிய நான்குவேதங்களும் எக்காலமும் விருத்தியடைந்திருக்க ஒதன்முதலிய வறு தொழிலுக்குரிய வந்தணர்கள காருகபத் தியம் யாகவநியம் தெட்சணாக்கிநியம் எ ன்னுமூன்றக்கினியையும் நாடோறும்வளர் த்து நியமந்தவறாது பெருகியிருக்க பசு க்கள் தேவாராதனைமுதலியவற்றிற்குக் கோ சலகோமயமுதலிய பஞ்சகௌவியங்களு முதலிப்பெருகியிருக்க பெரியோர்கள சரி

தைகிரியை யோகஞானமென்னும்வளமை
பெற்ற தவங்களைச்செய்து குறைவின்றி
யிருக்க குலோத்துங்கச்சோழனுடைய செ
ங்கோலினதுவளமையாகிய படைகுடிகூ
ழமைச்சுநட்புஅரண்கள குறைவின்றிபெரு
கியிருக்க அலைகளவீசாநின்ற காவேரியாற்
சூழப்பட்ட உறையூரொன்றுந்தலமும் தி
ரிசிரபுரம் ஸ்ரீரங்கம் திருவானைக்காவெ
ன்னுந்தலங்களுஞ் சிறப்புற்றிருக்கவ். று
உறந்தையுஞ் சிறக்கவென்னு மெச்சவும்
மையால் மற்றயதிருப்பதிகளும் வருவிக்க
ப்பட்டது.

இஃது . மங்கலமுதவிய சப்தபொ
ருத்தங்களுமமையவாழ்த்துக்கூறியது.

கோட்கவிகொண்டமோக்கள கொடு
ந்தமிழ்கூறநீத்துத், தாட்கவிப்புதியவாட்
டந் தலைக்கடை துரந்துசாட, வாட்கவி
கொண்டமன்னன் வளவனுமகிழாமே

நாட்கவி பாடுநாட்போலிருப்பது பெரிய
நாடே. (உ)

இ-ள் புல்விபகவிவாணர் முன்னோரா
து மேற்கோளாகிய பழமொழிப் பொரு
ளைக்கொண்டுசிலசிலபிரபந்தங்களைப்பாடி
வந்து அரங்கேற்றுங்கொடுந்தமிழைநீக்கி
நாடோறுமுண்டாகுமிப்புதிய வாட்டங்க
ள்கெட அப்போலிக்கவிகளைத் தலைவாயிலே
வந்தாரத்திச் சாடும்படியான வாளபோ
ன்றவெயின்னைக்கவியாசனைக்கொண்டிருக்
கும் இராஜாதிராஜனாகிய குலோத்துங்கச்
சோழனுமகிழ்ந்துகேட்க ஒட்டக்கூத்தரா
கியநாமே நாடோறும்புதிதாகவிளங்குமிக்
கவிகளைப்பாடுகின்றவிந்நாளைப்போலவே
பெரிய சோழநாடானது சிறப்புற்றிருப்
பது எ-று.

இஃது இவ்வீட்டியெழுபதென்னு
ம். பிரபந்தத்தைச் சொல்லித்திருமுன்பு சோ

மூனுமகிழ்ந்து கேட்டானென்பது கருத்து.

விடங்கமேழாதிவீதி விடங்கமாரூர்
வெண்காடு, நடங்கொளூர்தில்லைமூதூர்
பஞ்சநன்னதிசாய் காடு, மிடங்கொள்
மாகாளமேருமிடைமருதூர்செங்காடுந்,
தடங்கியதருமவாட்சிச் செங்குந்தர்தொ
குதிவாழி. (௫)

இ·ள் தியாகராயர் வீற்றிருக்கின்றஸ்தலங்களாகிய திருவாரூர்முதலிய சத்தஸ்தலங்களும் திருவெண்காடும சபாபதி நடனஞ்செய்யாநின்ற சிதம்பரமும் திருவையாறும் திருச்சாய்க்காடும் இம்மகா ற மாகாளமென்னும் பெயர்பெற்ற சத்த சிவஸ்தலங்களும் திருவிடைமருதூரும் திருச்செங்காடுமாகிய வித்தலங்களுக்குத் தருமகர்த்தத்துவமாகவிருந்து பரிபாலன

ஞ்செய்கின்ற செங்குந்தர்கூட்டங்கள்வா
ழ்ந்திருக்க ள் . று

இஃது செங்குந்தத்தலைவர்களிச் சிவஸ்
தலங்களுக்கெல்லாந் தருமகர்த்தர்களென்
பது கருத்து.

பாதநூபுரத்திற் றேவி சாலைகண்ட
மலங்கொண்ட, சாதலாற் றுப்பமாருங்க
திர்நவமணிமாதர்க்கண், மேதகு குந்தத்
தோடுமெய்ப்பரிசையோடும்வந்த, மாதவ
வீரவாகுத்தலைவரித்தலைவர்மாதோ. (௪)

இ. ள் விஷ்ட்ணுமுதலியதேவர்கள் சூரப
த்மன்முதலிய அவுணரால் துன்புற்று வெ
ள்ளியங்கிரியிலெழுந்தருளிய பரமசிவனை
வணங்கித்தங்கள்குறையைச் சொல்லிரக்
க அப்பரமசிவமவர்பாலிரக்கமுற்றுத் தம
துதொல்லையதாகிய வாறுமுகத்தோடுபார்
வதிசமேதரா விளங்கியவ்வாறு நுதற்கண்

ணிணீர்றும் ஆக்கினிப்பொறிகளைவெ
ளிப்படுத்த அப்பொறிகளண்டரண்டங்க
ளெல்லா நடுங்கும்படி தகிக்க உமையம்ப
யந்தெழுந்து தன் சிலம்புகளொன்றோ
டொன்றுதாக்கத் தெறிக்கும்படி யகன்று
புரத்தோடு விஷ்ணுமுதலியதேவர்கள் தி
க்குகடோறுமோடவருந்திப் பெருமூச்சு
விட்டொருவிக்கினுஞ் சகித்துயிர்ப்பிழைத்
தலீதாகி பின்னும் பரமசிவனை நெருங்
கிச் சுவாமீ மித்தவலிமையுடைய அவுண
ர்களையழிக்கத்தக்கவொருபிள்ளையைக் கி
ருபை செய்யவேண்டுமென்று கற்த முடி
வில்லாத ஆற்றலுடைய வக்கினியைக் கி
ருபைசெய்தநீர் அவ்வக்கினியானது உல
கெங்கும்பரந்து துன்பப்படுத்துவதால
ந்நெருப்பையோர்கணத்துள் மாற்றவிடி
ல் உலகமுழுவதுமென்று துதிக்க அக்கட
வுளிரங்கியஞ்சலீசென்று கையமைத்து
அத்தருணத்திற்புதிதாகத்தோன்றிய ஐந்து

முகங்களையு மாற்றி ஏகமுகத்தோடுவிளங்கி
அத்தீப்பொறிகளைக்குழுகித் தன்னெதிரில்
வரச்சிந்தித்து வாயுவையும் அக்கினியையு
நோக்கி நீவீரிவ்வறுபொறிகளையுங் கொ
ண்டுபோய்க் கங்கையில் விடுவீராயின் அ
து சரவணையில்விடுமெனக் கூறி அதைத்
தாங்கிச் செல்லதற்கு வலிமையுங் கிருபை
செய்ய அவர்கள் மற்றைத்தேவர்கள் தம்
மைச்சூழ்ந்துவரக் கங்கையில்விட அக்கங்
கை சரவணையில்விட அவ்வாறுபொறிகளு
மாறுகுழந்தைகளாகத் தாமரை மலரில்வி
ளையாட்டயர்தலை இந்திரன்கண்டு மகிழ்ந்
து கார்த்திகைமுதலிய அறுபத்தினிகளையு ம
ழைத்து அக்குழவிகளுக்குப் பால்கொடுத்
துக்காக்கும்படிகட்டளைகொடுக்க அவர்க
ளவ்வாறுசெய்யக்குழவிகள்வளர்ந்து அ
ற்புதமான விளையாடலைச்செய்து சோலை
களை அலங்காரமான பத்தராக அமர்ந்தி
ருந்தன· அக்காலையில் அத்தீப்பொறிகட்

ருவெருவிக்காற்சிலம்புமொளான்றேவிடா
ன்றுதாக்கி நவமணிகள்சிதறும்படி யோ
டின உமையவள் நடந்த விருத்தாந்தங்க
ளையறிந்து சிவனதருளாற் றன்வயிற்று
ண்டாகத்தக்க மதலையை யிவ்வாறுசெய்த
தேவர்களதுபத்தினிமார்களுக்குக் கருப்ப
மில்லாமற்போகக்கடவதென்று சபித்துப்
பரமசிவனது திருமுன்னர்வந்துவணங்கி
தேவர்குறைநீக்கத் தாயருளிய திப்பொறி
ளுக்கஞ்சி நீங்கி மீண்டனனென்றக்கடவு
ள்மகிழ்ந்து தனதிடப்பாகத்திருத்தினர்மு
ன்னம் ஒடுகையிற்பாதச்சிலம்பினின்றுஞ்சி
தறியநவமணிகளிடத்து உமையினதுதிருவு
ருவந்தோன்ற அதுகண்டபரமசிவன் வ
ரக்கடவீரெனக் கிருபையோடுஞ்சொல்ல
உடனேமணிக்கொருசத்திகளாகிவந்து ப
ரமசிவனைவணங்க அவர்நோக்கினதால்முநி
வர்மகளிரைப்போலவுடனேகருப்பங்கொ
ண்டதையுமையறிந்துகோபித்து எனக்கு

மாறுகநீவீர் கருப்பங்கொண்டமையால்
அநேகஜாலமிச்சருப்பம் வெளிப்படாமலி
ருக்கக்கடவதென் றுசபிக்க அதனைக்கேட்டுத்
துப்பயந்துமெய்வியர்க்க அவ்வியர்வில் க
டவுளதருளாற் சூரியந்திரன்போல மிகுந்த
வலியையுடையவர்களாக லட்சம் வீரர்களு
ண்டாகிச் சிவத்தைவணங்க அவர்நீவீர்வலி
யோடும் இந்திராதியர்பகைவனைக்கொல்வ
தற்குள்மதுகுந்தவேள்படையாவீரென் றுகி
ருபைசெய்தபின் அம்மாணிக்கவல்லிமுத
லிய நவசத்திகளுஞ்சாபத்தால்வருந்தியநே
கசாலமுமையவளுக்குப்பணிசெய்துவர
அவர்கள் கெற்பத்துள் நந்திதேவர் முதலி
யசிவகணங்கள் பாலராகவளர்ந்துஒப்பில்
லாத காளையராகிநன்னெறிபொருந்திசுக
மொணம்படி பரமசிவத்தைத்துதித்துவண
ங்கிபோகுசெய்து வீற்றிருத்தலினற்பொ
றைமேற்பட்டுத் தாங்கக்கூடாமையாலத்
தவசத்திகளும் பரமசிவத்தோடுமையவ

ணங்கி நெடுநாளா யிக்கருவினால் நொந்த
னம் இனித்தாங்ககில்லோமென சுவாமியு
மையைநோக்கி யுரைபாதச் சிலம்பிலுதிக்
த நவசத்திகளும் உன்சாபத்தா னெடுங்கால
மிக்கருவினால் வருந்தினர் இனி பாலரைப்
பெறக் கிருபை செய்வாயெனக்கேட்ட
வுமையானவள் மகிழ்ந்து பெண்களை
ப்பார்த்து நீவிர் மிகுந்த வலியினரான கு
மாரரைப்பெறக்கடவீரென்றவுடனே மா
ணிக்கவல்லி · தரளவல்லி · புருடராகவல்லி
கோமேதகவல்லி · வைடூரியவல்லி · வயிர
வல்லி · மரகதவல்லி · பவளவல்லி · நீலம
ணிவல்லி · ஆகியநவசத்திகளிடத்தில்முறை
யேமேலான இட்டியோடும் முத்திங்க
ளோசையோடும்வந்துதித்த வீரவாகு · வீ
ரகேசரி · வீரமயேந்திரன் · வீரமயே
சுரன் · வீரபுரந்தரன் · வீரராக்கதன்
வீரமார்த்தாண்டன் · வீரராந்தகன் · வீர
தீரன் ஆகியவிந்நவவீரர்களுமே இச்செ

ங்குந்தத்தலைவர்களாவர் ஏ· று பின்புபரம
சிவனுமையைநோக்கித் தேவர்களின்பொ
ருட்டு இரக்கமுற்று யாம்தந்தஆறுபொறி
களுஞ் சரவணத்துமதலையாக வளர்கின்ற
ன யாம்போய்கொடுவருவோமென்று உ
மையோடுவிடையின்மீதேறிமுப்பத்துமு
க்கோடிதேவர்களுந் தம்மைச்சூழ்ந்துப
ணிசெய்துவரச் சரவணப்பொய்கையிட
த்துப்போயிந்தநீர்மகவையெடுத்துவரு
வாயென அம்மைசென்று தன்கையால
ணைத்தெடுப்ப ஆறுமுகமும் பன்னிருகை
யுமொருடலுமாகவிளங்கக்கண்டெடுத்து
வந்து சிவனதுதிருவடியில் வணங்குவிக்க
அவனணைத்து மகிழ்ந்துஉமையோடு தன
திடதுபக்கத்திருத்திச் சகலரும்புகழ்ந்து
துதிக்கக்கைலாயம்வந்தனர்·

இஃது ஸ்காந்தப்புராணத்திலுள்ளபடிசு
ப்பிரமணியர் வீரவாகுமுதலிய நவவீரர்க
ளிலட்சங்கணங்களிவர்களுற்பத்திகூ

றியது.

பிறந்தவொன்பதின்மர்குந்தப் பெருமையாம்பேசமாட்டோம், பறந்தனக ருகும்பாறும்பயிரவிகாளியஞ்ச, மறந்த கு மவுணராட்டமடங்கின மகிழ்ச்சியால் வாய், திறந்தனவலகையீட்டஞ்செய்யவா ய்ச்சிறுவரோடே. (ரு)

இ-ள் சர்வணப்பொய்கையி லுற்பவித்துன்னகவாயத்தில் வளராநின்றமுருகக்கடவுள் தேவர்களின்பொருட்டு அசுரர்களைச் சங்கரிக்கப் படைத்துணையாகச்சென்ற மாணிக்கவல்லி முதலிய நவசக்திகளிடத்துற்பவித்த வீரவாகுதேவர்முதலிய நவவீரர்களுடைய திருக்கரத்திலிருந்த உமையவளாற்கொடுத்த குந்தமாகிய இட்டியினது பெருமையையெம்மாற்சொல்முடியாது ஆயினு மொருவாறு சொல்லுகின்

றேம் அவர்கள் செய்த யுத்தத்தைக்கண்டு கழுகின்கூட்டங்களும்பருந்தின்கூட்டங்களும் ஆகாயத்தில் வட்டமிட்டுப் பறந்தன. துர்க்கையும் காளியும் கண்டஞ்சும்படி அதர்மத்தின்மிகுந்தசூரபதுமன்முதலிய அவுணர்களது யாவரையுஞ்செயங்கொள்ளுங் கூத்தாட்டங்கொண்டன அவ்வசுரர்களது கொழுத்தபிணக்குப்பையைக் கண்டு மகிழ்ந்து பேய்க்கணங்கள் தங்கள் தங்கள்சிவந்தவாயினையுடையகுழவிகளோடும் வாயைத்திறந்தன. ஏ. று

இஃது செங்குந்தத்தினது வல்லமை கூறியது.

ஏதியவேள்வியினுவப்பநாரதன், போ
தவேதகர்த்தனைப் பொங்குதீத்தர, வேதனை
ப்படுப்பதைவிரைநதுகட்டி[illegible]ய, சேதன
க்குதவினதிருச்செங்குந்தரே. (எ)

இ-ள் நாரதமஹாமுநிவன் தான் விரும்பிய பயனைப்பெற்றுச் சந்தோஷிக்க வேதத்திற்சொல்லியவிதிவழாதுசெய்தயாகத்தில் பொங்கியெரியாநின்ற அக்கினியானது மிருந்தவலியினையுடைய ஆட்டுக்கடா வைத்தர அதுதம்மையுமன்றிச் சகலலோகங்களையுந் துன்பப்படுத்துவதைக்கண்டு நாரதமுநிவனும் தேவர்களும் வெள்ளியங்கிரியில்விளையாடாநின்ற முருகக்கடவுளையடைந்துமுறையிட அவரதுகட்டளையினால் அழகியசெங்குத்தராகியவீரவாகுதேவர் அதிசீக்கிரத்திற்சென்று அவ்வாட்டைக்கட்டியம்முருகக்கடவுளுக்குவாகனமாகவுதவினர் எ-று.

இஃது முருகக்கடவுளுக்கு ஆட்டுக்கடாவை வாகனமாக உதவினமை கூறியது.

பொதியமால்வரைக்குறுமுநிதேறவு

ம்பொருள்சொன்ன, மதியையாறெனவு
டையவோர்மூவிருவதநத்தான் ,கதியையாற்
றியுங்குணத்தொடுபழகியுங்காணு, விதியை
மேவலர் நடுங்கிடத் தலையிடுமிளிர் குந்தம்.

இ-ள் பெரிய பொதிய மலையையிடமாக
வுடைய அகத்தியமுநிவன் மெய்ஞ்ஞானத்
தைத்தெளிந்து கொள்ளும்படி உண்மை
ட்பொருளையுபதேசித்த ஆறுமுழுமதிபெ
ன்றுசொல்லும்படிக்கேற்ப ஆறுமுகத்
தையுடையவராகிய முருகக்கடவுள் விள
ங்கா நின்றகுந்தத்தையுடைய வீரவாகு தே
வர்முதலியநவ வீரர்களால் சத்தியபதவிக்
குத்தலைவனாகவிருந்து சிருஷ்டித் தொழிலை
ச்செய்தும் இராஜஸ்குணத்தோடு பழகியு
ம் பிரணவத்திற்குப் பொருளறியாதிருந்த
பிரமனைப்பகைவர் நடுக்கங் கொள்ளவில
ங்கிடுவர் எ-று.

இஃது பிரமனுக்கு விலங்கிட்டமை
கூறியது.

வனமுறு வாசமா வைகல் விட்டி
யா, சனமுறவின் னிடந் தனி வைகுந்தமு,
மினனுறு பங்கயமுவக்கெப்தவே, சின
முறுதாருகற்செறிசெங்குந்தமே. (அ)

இ. ள். அவுணர்களாற் றுன்பமடைந்து காட்டிற்குடியாகவிருந்ததைவிட்டுத் தங்கள் தங்கள் பூசாகவிங்கரியங்களை நடத்தச் சுவர்க்லோகமும் ஒப்பற்ற வைகுந்தமும் சூரியனைக் கண்டவரா நின்ற தாமரையாசனமும் இந்திரன் விஷ்ணு பிரமன் இம்மூவருக்குங் கிடைத்திருக்கக் கோபத்தைப் பொருந்திய தாருகாசுரனை யுத்தத்தில்நாசம்பண்ணிய செங்குந்தத்தலைவர்களாவர் எ-று.

இந்து தாருகசம்மாரங்கூறியது.

பூட்டியதேரொடும்பொலிந்தபாரு
வை, யீட்டியதொட்டிவி னிறுக்குமைந்த

ளை, மூட்டியசமரிடைமுடித்துமாசறத்
தீட்டியவீரர்கைச்சிறந்தகுந்தமே. (கூ)

இ - ள் குழந்தைப்பருவத்தில் தன்மீ
து சூரியகிரணந்தாக்கியழலக் கோபித்து
எழு குதிரைகளைப் பூட்டிய தேரினோடும்
பொலிவு பெற்ற சூரியனைத்தெரிந்தெடு
த்துச் சேர்த்தநவமணிகளாற் செய்ததொ
ட்டிலோடுஞ் சேர்த்து இறுக்கிக்கட்டிய
பானுகோபனென்னுஞ் சூரபதுமன்பிள்
ளையை மூளுவித்தயுத்த களத்தினிடத்துச்
சங்கரித்து அவனர்களாகிய குற்றநீங்கும்
படிபுகழையுமகத்தி யெழுதிவைத்தது நவ
வீரர்களதுகையிற்பிடித்த சிறப்புப்பெற்ற
குந்தம். எ - று. தீட்டியது - தீட்டிய
வென்குறைந்து நின்றது.

இஃது இத்தன்மையையுடைய பா
னுகோபனையும் இக்குந்தஞ்செயித்ததென

தீக்கூறியது.

பங்கமிலரிமுகப் பகைதலைக்கிளைமங்க
வே நூறியார் வாகைமாலையை, யெங்க
ள் வேற்படை தனக்கொன்று சூட்டியொ
ன், செங்கடம்பணியுமால் செய்யகுந்த
மே. (௰)

இ-ள். இரத்தத்தாற்சிவந்தகுந்தமான
துகெடாதவரத்தைப்பெற்ற சிங்கமுகாசூர
னுடையபதைதலைகளாகிய கிளைகளைக்கெடும்
படி சங்கரித்து ஒப்பற்ற வெற்றி மாலை
யை எங்கள் முருகக்கடவுள்கையிற்கொண்
ட வேலாயுதத்திற்கே தக்கதென்றுதரித்து
விளக்கமாகிய செங்கடப்பமாலையைத் தா
ன் றரித்துக்கொள்ளும் எ-று.
இஃது சிங்கமுகாசூரன்வதைகூறியது.

வனப்புறுமிளவலும் வரச்செவ்

வேற்குகர்,கரப்பகலாதினிற்கலாபமேறி
யே,யிலப்பகழ் சேவலங்கொடிதற்கேற்
றவெஞ்சினப்புலிக்கொடிதரச்செறிசெ
ங்குந்தமே. (கக)

இ • ள் அழகுபொருந்திய இளவலாகி
யவீரவாகு முதலியநவ வீரர்களுந்தனைசூ
ழ்ந்துவர இரத்தத்தாற் சிவந்தவேலாயுதத்
தையுடைய முருகக்கடவுளானவர் பெரு
மைபொருந்திய ஆறுநாளையில்சூரபதும
னைச்சங்கரிக்க அவன்கடலில் தலைகீழாகமா
மரவுருவங்கொள்ள அதைவேலினலிருபிள
வாக்க அவ்விருபிளவும் மயிலுங்கோழியு
மாகிவர அம்மயிலைவாகநமாகவேறிதன்னி
னத்தைப்புகழாநின்ற கோழியைக்கொடி
யாகத்தன்கையிற்றாங்கிக் கொடியகோபத்
தையுடைய சூரபதுமனது புலிக்கொடி
யைக்கொடுக்க அச்செங்குந்தர்கள்பெற்
றார்கள் • எ • று

## இஃது சூரசம்மாரங் கூறியது

குறையினைக்கடவளர் கூறக்கேட்டவ
ரீ, துறையினை நிறுவியே சூர்தடிந்துநார்,
மறையினைவழுவற வளர்த்துத்தேவர்தஞ், சி
றையினைமீட்டது திருச்செங்குந்தமே ௧௨

இ · ள். தேவர்சள்சூரபதுமனுல் தங்கள் தங்கள்கர்மானுஷ்டானமும்முறைசெலுத்தல்முதலிய செயல்களையும்விட்டுத் துன்பப்படுங்குறைகளைச் சொல்லக்கேட்டுச்சூரபதுமன்முதலிய அவுணர்களைக்கொன்று அத்தேவர்களை மகேந்திரபுரத்தினின்றுஞ் சிறைமீட்டு அவரவர்கள்செய்யுந்தொழிலை நிலைபெறவைத்து இருக்குமுதலியநான்குவேதங்களையுங் குற்றமற வளர்வித்தபுகழையுடையது ஆகிய செங்குந்தம் எ · று

இஃதுதேவர்சிறைமீட்டமைகூறியது.

தாருவஞ்சுரபியுந்தவளவேழமுந், தா
ருடைப்புரவியுஞ் சசியுங் கைம்மிசைப்,
போருடைவச்சிரவாளும்பொன்னகர்ச், சி
றுறும்படியவுண்செறிசெங்குந்தமே,

இ-ள். அரிச்சந்தநம்·கற்பகம்·சந்தாந
ம்பாரிசாதம்·மந்தாரம்·ஆகியபஞ்சதாரு
க்களும் காமதேநுவும் வெள்ளிய ஐயிரா
வதமும் சதங்கைமாலைமுதலிய மாலைகளை
யுடைய உச்சைச்சிரவமென்னுங் குதிரை
யும் இந்திராணியுங் கையிற்கட்டாங்கிய
பகைவரதுபோரையுடைக்காநின்றவச்சி
ராயுதமும் பொன்னுலகத்தி லாசிருத்தன்
முதலியபலசிறப்புகளுமாகிய இவற்றை யி
ந்திரனடைந்துவீற்றிருக்கும்படி சூரபது
மன்முதலிய அவுணர்களையழித்தது செங்கு
ந்தம் எ-று.

சிறும்உறும்படிஎன்னுமென்னும்
மைவிகாரத்தாற்றொக்கது

இஃது இந்திரனுக்குப்பொன்னுலகைச்சி ர்நிலைபெறச்செய்தது செங்குந்தமென்ப துகருத்து

முன்பகையாவைய முடித்துக்கூறொ
யிற், றன்பகையாவையுந்தடிந்துசந்ததம்,
பின்பகையில்லதாப் பெற்றிசெய்த்தாம்,
ஒன்பதினோர்கரத்தொளிநங்குந்தமே. கஅ

இ-ள் பழைய பகையாகிய சூ ரபதுமனைக் கொன்று அவனுக்குக்கொ டுத்த வரத்தைநிறைவேற்றிக்கூரியபற்களை யுடைய சிங்கமுகா சூரன் முதலியதேவர் பகையாகியயாவரையு நாசஞ்செய்து பி ன்னரொக்காலத்தும்பகையில்லாததாக வீரத் தன்மையைச்செய்தது வீரவாகுமுதலிய ந வவீரர்களது கையின்கண் விளங்கா நின்ற குந்தம். எ-று

சூரபதுமன்முற்செனனத்தில்முருகக்க

டவுளுக்குப்பகையெர்பதும் தனக்குவா
கனமாகவும்கொடியாகவுமிருக்கமூர்வர
மூளதென்பதுந்தோன்றமுன்பணையென
வும்யாவையு முடிக்கெனவுங்கூறினர் மு
டித்தென்பதற்குக்கொள்கெனவும் நிறை
வேற்றியெனவும் பொருள்கொள்க

இஃது நவவீரர் ள் தேவர்பகைபா
வையும் ஒழித்தனென்பதுகருத்து.

வெள்ளிமால்வரைசூழ்காப்புமிரீம
ணிச்சிகரக்காப்பும் பள்ளிமால்வரையின்
காப்பும்பைம்பொ பரணக்காப்பும் ள்
ளிதாக்கைக்கொளென்று மகிழ்நீற்றுக்கா
ப்புமிட்டுத்தெள்ளிதாயுமையாடந்தசெங்
குந்தம்போலுமுண்டோ. ௧௫

இ-ள் உயர்ந்தவெள்ளியங்கிரியைச்
சூழ்ந்து காக்கின்ற காவலும் உச்சியின்க
ண் பிரகாசம்பொருந்திய இரத்தினங்களி

றைசீந்தொருமண்டபக்காவலும் அந்த ப்புரத்தையுடைய மகிமேருவின் காவலும் பசும்பொன்னாலும் மணிகளாலுஞ் செய் த ஆபரணக்காவலும் வளப்ப மாகக் கைக் கொள்ளுங்களென்று உமையாள் நவவீர ர்களையழைத்து மகிழ்ச்சியோடுநின்றுக் காப்புமிட்டுத் தெளிவாகக்கொடுக்கப்பெ ற்ற இச்செங்குந்தம்போலப்புகழ்பெற்ற திவ்வுலகத்தில் வேறுண்டோவென்று

இஃது செங்குந்தர் கைலைமுதலியவி டங்களைக் காக்கப்பெற்றமைகூறியது.

சலம்பிரியாதகுட்டுச்சாவற்சேதனமெ
ஞ்ஞான்றும், வலம்பிரியாதசெவ்வேட்கு
ந்துணையாகமன்னூட், குலம்பெறவந்தா
ரொன்றங் கொடியுமைதந்தவீட்டி, நலம்
பெறுமிந்தக்குந்தர்ப் பரிசுபோனட்டி
லுண்டோ. (கரு)

இ-ள். தன்னினத்திலொருவரையொ
ன்றாகாணிற்பகையாற்போய நீங்காத உச்
சிக்கொண்டையிணையுடைய சேவற்கொ
டியானது எக்காலத்தும் வலதுபக்கத்தை
விட்டுநீங்காத சுப்பிரமணியக்கடவுளுக்கு
மிருந்ததுணையாகவும் நிலைபெற்றதமதுரு
லப்[illegible]க்கத்தைப்பெறவும் வந்தனரொன்
றுமகிழ்ந்து அழகிய பூங்கொடிபோன்ற
உமையவள் கொடுத்த கைவேலாகிய நன்
மையைப்பெற்ற இச்செங்குந்தர்கள்பெ
ருமைபோல இந்நாட்டில்வேறில்லை எ-று.
இஃது குந்தர்கள்சிவனதுமாமியினொ
ன்றுமுமையவளாற் கைவேலைப்பெற்றன
ரென்றுங்கூறியது.

பருப்பதமேரகம் பரங்குன்றப்பழ
ம், பொருப்பதமாவினன்குடி செந்திற்
பொது, விருப்பெனக்குன்றுதோருடலா
மெனுந், திருப்பதிதமிலமர் செப்பிய குந்
தமே. (கஎ)

இ - ள். முருகக்கடவுள்சமமானவிருப்பத்தை யுடையவரொன்று சொல்லும்படியான திருவேரகமென்னு மலையும் திருப்பரங்குன்றமும் பழமுதிர்சோலை ம் அழகிய திருவாவினன்குடியும் திருச்செந்தூரும் குன்றுதோறாட லு யாமென்று சொல்லாநின்ற இவ்வா றுதலங்களிலும் இச்செங்குந்தம்விற்றிருக்கின்றனர் ள். று.

இஃது செங்குந்தம் தத்தலங்களில் விசேஷமாகப்பூசிக்கப்படுமென்பது கருத்து.

தேடுவார்வலமீய் வந்து தெரிசிப்பார் சென்னிமீது, சூடுவார்மலரோ தூவித்தொழுதைகூப்பிநிற்பார், பாடுவார்காவென்றெம்மைப் பரிவினைநந்தமாக, ஆடுவார்குகர்கைச் செவ்வேவற்கருந்துலோக்குந்தமென்றே. (௧அ)

இ • ன் உலகிலுள்ளார் முருகக்கடவுள் கையிற்கண்ணுள்ள இரத்தத்தாற் சிவந்த வேலாயுதத்திற்குக் கிடைத்தற்கரிய சகாய மாருய் குந்தமென்றுறுதி செங்குந்தம் எவ்விடத்திருக்கின்றதெனத் தேடுவார் தங்கள் கண்களாற்கண்டுவலமாகவந்து தரிசிப்பார் மலர்களாலருச்சித்துத் தலைமீதணிந்துகொள்வார் பாதத்தில் வீழ்ந்து வணங்கி இரண்டுகைகளையுங்கூப்பி ஸ்திரகதிப்பார் எம்மையிரட்சிக்கடவாவென்று அதன்புகழைப்பாடுவார் பின்னும் ஆசையோடும் ஆநந்தமாக ஆடுவார். ஏ . று

இஃது குந்தத்தினது மகிமைகூறியது.

ஆலங்காட்டினிலிரண்டனன் றவாதாடும், சோலங்காட்டியகாளிதன் கொந்றம்போய்வெள்கப், பாலங்காட்டியபன்மணித்தாளமேபதித்துச், சிலங்காட்டியஞந்தாற்பெருமையார் தெரிப்டார்.(௧௬)

இ-ள் திருவாலங்காடென்னுஞ் சிவஸ்
தலத்திற் பரமசிவத்தோடக்காலத்துவாதாடு
கின்ற கோலத்தைக் காட்டிய காளியினது
வெற்றிகெட்டுவெட்க அக்காளியினது கை
யின் கண்ணுள்ள ஒளியைவீசிய பலவிரத்தி
னங்களிழைத்த தாளத்தைப்பறித்துத் தனது
மகிமையையுலகத்திற்காட்டிய குந்தர்கள
து நல்லபெருமையை யார்சொல்லத்தக்க
வர் எ-று

இஃது செங்குந்தர் காளிகைத்தாளம்ப
றித்தமைகூறியது.

செங்களம் பொருதியதிருந்தலாரூர,வ
ங்கமேமண்மிசையாக்கியாவியைச், செ
ங்கதிர்வழியிடைச்செலுத்தித்தேவர்க,—ங்
கூளவான்புகத்தருஞ்செங்குந்தமே.(உ௰)

இ-ள் இரணகளத்தில்வந்து தம்
மோடெதிர்த்துயுத்தஞ் செய்தபடைகவர்க

ளாகிய அரக்கர்களது வலியவுடலைமண்மீ
து வீழச்செய்துஉயிரை சூரியன்மார்பின்
வழியாகச் சுவர்க்கபதவியை யடைவித்துத்
தேவர்களை வானுலகத்தி னிலைபெற்றிருக்
கச் செய்யும் செங்குந்தம் எ - று.

இஃது செங்குந்தம் தம்மோடெதிர்
த்தபகைவரைச் சுவர்க்கத்திலடைவிக்குமெ
னக்கூறியது.

பரகதிவேள்விபண் ணுமிருடி தன்பா
ன்மை பாரா, வரகதிதந்தையேவுமமரனை
மடியநூறி, பிரதமோர்டிவுளிவேழமியாக
தானத்துக்கீந்து, சிரமணிமகுடம்பெற்ற
செங்குந்தர்போ லுமுண்டோ. (௨௧)

இ-ள் மோட்சகதியை முருகக்கடவு
ளாற் பெறும்பொருட்டு ஒரியாகத்தைச்
செய்யு முநிவனது வயிராக்கிய தன்மை
யைநோக்கிப் பிரமதேவன்றனது மேலா

ணபதவியைக்கொடுக்கும்பொருட்டு அம ரரையேவ அதற்குத்தான் விரும்பியது இஃத ன்றெனமறுத்தமுநிவனையெதிர்த்ததால் அ வ்வமரரைப்போர்க்களத்தின் மடியக்கொ ன்று அவர்களிரதங் குதிரை யானையிவைக ளை அவ்வியாகத்துக்குத் தானமாகக்கொடுத் து அவர் சிரசிற் றரித்தஇரத்நகிரீடங் களை க்கை கொண்ட செங்குந்தர்களைப்போ லுமிவ்வுலகத்திலுண்டோ வ் • று

இஃது தவத்துக்கிடையூறுசெய்தா ரியாரேனும் அவரையச் செங்குந்தர்வருத் துவரென்பதுகருத்து.

அம்பாழிசூழ்கி யொருகற்பமெலா ங்கிடைக்கினு மென்னழிவின்று, வெம் பர்மேவெளிக்கா லுண்டுட்காலை வெளியில் விடாதிருத்தாலென்னே, வம்பாருமிதழிய ணிவேணியனார் வேதமலை வலம்வந்தீண்டு ஞ், சம்பாதிக்கமுதளிக்குஞ் சபக்குந்தர்.

போல்வினவத்தாராவன்றே. (உ௨)

இ-ள் ஒருகற்பகாலமெல்லாஞ்சமுத்திரத்தில் மூழ்கித் தவஞ்செய்திருக்கக் கிடைக்கினும் யாதுபிரயோசனத்தைத்தரும் பஞ்சாக்கினிமத்தியினின் றுசரீரம்புழுங்காமல் வெளியிலுலாவுகின்றகாற்றை ஆகாரமாகக்கொண்டு உள்ளிருந்துஇடைபிங்கலையின்வழியாகப் பல்லினண்டஞ்சிலுஞ் செல்லாநின்றகாற்றைக் கும்பித்துச்சுழிமுனையிற்செலுத்தியோகஞ்செய்து ஒருகற்பகாலமிருந்தாலும் யாதுபிரயோசனத்தைத்தரும் வாசனைபொருந்தியகொன்றைமாலையைத்தரித்தசடாமகுடத்தையுடைய வேதகிரிநாதர் வாழுகின்ற திருக்கழுக்குன்றத்தைவலமாகவந்து நெருங்கி யிராமாயணத்திற்சொல்லிய சடாயுவென்னுங் கழுகரசனது தமையனாகிய சம்பாதிக்கு மோட்சத்தைக்கொடுக்கும் வெற்றிபொ

ளூர்ஜிய நவவீரர் ளது செங்குந்தம்போல
க்கீசட்டவடன்கொடு கமாட்டாதன மற்
றைத்தவர்கள் எ. று.

எஃது செங்குந்தம்போ பலத்தைக்
கொடுக்குமென்பது கருத்து

உருக்கொடு பணியாதாரை யுளத்திலே
ரெழுத்தை யுன்னிப், பெருக்கொடு சவள
நீற்றைப் பேணி பணியாதாரைத், தருக்
கொடு மன்றகன் ணீர்ததும்ப முன்னுடை
தாரைத், திருக்கோயில்வலம்வாராரைச்சி ர
த்தொடுபொருஞ்செங்குந்தம். (௨௬)

இ - ள் பரமசிவனை மநவுருக்கத்
தோடு வணங்காதவனையும் பஞ்சாக்ஷரத்
தைத்தமதுள்ளத்தில் தியானித்து வெள்ளி
யதிருநீற்றை மிகுதியாக விருப்பத்தோடுதி
ருமேனியிற்றரித்துக் கொள்ளாதவனையுங்
தவச்செருக்கொடு எதிராகநின்று ஆநந்த

கிகண்ணீர்ததும்பநடனஞ்செய்யாதவரை யும் சிவாலயங்களை வலஞ்செய்யாதவரை யுங் கோபத்தோடு சங்கரித்துவிடுகின்றபட த்திமான்கள் இச்செங்குந்தத் தலைவர்கள்.

ள் . று

இ-து செங்குந்தத்தலைவர்கள்சிவசம யபரிபால னைக்கூறியது.

கூவிளையிதழிதும்பைகொண்டரிச்சி த்தபேர்க்கு, மூவர்தம்பாடலோதிமுன்னி ன் றுபணிந்தபேர்க்கு மாவலோடைந்தெ முத்தையகத்துள் நினைந்தபேர்க்குந்தே வர்நாடாளவைக்குந்திருக்கை வேற்றுணைச் செங்குந்தம் (௨௪)

இ-ள் பரமசிவனை வில்வத்தளிர்க ளுங்கொன்றைமலர்களுந் தும்பைமலர் களுங்கைக்கொண்டரிச்சனைசெய்த அடி யார்களையும் அப்பர் சுந்தரர் சம்பந்த

மூர்த்திகளாகியமூவராற் சொல்லியதேவா
ரப்பாடலைத் தோத்திரஞ் செய்து ஸ்திரக
நின்றுவணங்கின அடியார்களையுமாசை
யோடுபஞ்சாக்ஷரத்தையுள்ளத்தில்தியானி
த்தவடியார்களையும் மகதேவரதுசிவலோ
கத்தையாளும்படிசெய்விக்கும் முருகக்க
டவுளது அழகியகையின்கண்ணுள்ள வே
லாயுதத்தைத் துணையாகவுடையசெங்குந்த
ம் எ-று

இஃதுசெங்குந்தம்இவ்வாறுசெய்தவடி
யார்களை சிவலோகத்தை யாளவைக்குமெ
னக்கூறியது.

ஆலமார்மிடற்றுராடு மாடலேயாட
லம்மை,யேலவார்குழலாளங்கைத்தாளமே
தாளமேந்துஞ், சூலமாகுவதனன்னைச்
சூலமேசூலமற்றிக், கோலம்வாழ்வீரர்கை
யிற்குந்தமேகுந்தமாகும். (௨௫)

இ-ள் விஷம்பொருந்தியகண்டத்தினையு
டைய சதாசிவமூர்த்திசர்வசம்மாரகாலத்தி

ற்செய்யுநடனமேநடனம் அக்காலத்துமயி
ர்ச்சாந்துபொருந்தியநீண்டவளக்கதையு
டைய தாயாகியஞானசத்தியந்நடனத்திற்
குத்தக தக்கையாற்கொட்டியதாளமேதா
ளம்சூலமாவது அச்சதாசிவந்தன்கையிற்
றுங்கியசூலமேசூலம் அதுபோலவேயழகு
வீற்றிருக்கின்ற நவவீரர்கையிற்கொள்ளுங்
குந்தமேகுந்தம். எ. று.

இஃது குந்தத்திற்கு ஒப்பின்மை கூ
றியது.

ஆதிநாளுடைமையவ ளளித்தகுந்தமே,
சாதிநாலுவப்புடன் றலைகொளகுந்தமே,
காதிமேவலரையுங்கல்லுங்குந்தமே, கோ
தினம்பாடவேகொள்ளுங்குந்தமே (உசு)

இ. ள் நம்மாற்சொல்லப்பட்டகுற்ற
மற்றபிரபந்தத்தை அங்கீகரித்துக்கொள்
ளுங்குந்தமான துமுன்னளில்உமையவளா
லே வீரவாகுமுதலியநவவீரர்களுக்குக்கொ

கேக்கப்பட்டகுந்தமாகும் பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திரரென்று சொல்லா நின்ற நாலுசாதிகளுங் களிப்புடன் தங்கள் தலைமீது வைத்துக் கொள்ளுங் குந்தமாகும் தன்னை வணங்காதவரைக் கோபித்து உலகத்திலநிலைபெறாது அழிக்குங்குந்தமாகும் ள். று.

இந்து குந்தப்பெருமை இத்தன்மைத்தெனக்கூறியது.

கருதலர்பொடிபடக்கருதுங்குந்தமே,
விருதுடைச்சூர்முடி வெட்டுங்குந்தமே,
பொருதனிப்புலிக்கொடிபுனையுங் குந்தமே, தருகனத்தருவெனத்தருஞ்செங்குந்தமே.

இ-ள். பொருதற்குக் காரணமாகிய ஒப்பற்ற புலிக்கொடியை அலங்காரமாகத்தரித்துக்கொள்ளுமிச் செங்குந்தமானது பகைவர்கள்முடிபொடிபடச்செய்தலை அ

ணிவாகக்கரு துங் குத்தமாகும்வெற்றிவிரு
துக்களையுடைய சூரபதுமன்முதலிய அவுண
ர்களுடைய தலைகளைவெட்டியகுந்தமாகும்
அடுத்தவர்க்குக்கொடுத்தவில்கற்பகமுதலிய
அந்தப் பஞ்சதாருவைப்போலக்கேட்டவ்
ப்பொருளையுங் கொடுக்குஞ் செய்யகுந்த
மாகும் ள் · று·

## இதுவுமது

கைகலைமால்வளையையுங் காக்குங்குந்
தமே, தயிலைநற்றுணையெனவாக்குங்குந்த
மே, வெயிலையன்மணி களிக்கிளிருங்குந்
தமே, மயிலைவாகன மெனவாக்குங் குந்த
மே.

(உஅ)

இ · ள் இச்செங் குந்தமானது உ
யர்ந்தகைலை மலைமுதலிய சிவனிடங்களெ
ல்லாங்காக்கின்ற குந்தமாகும் வேலாயுதத்
தைத்தனக்குநல்ல துணையெனஆக்கிக்கொ

ள்ளங்குந்தமாகும் பிரகாசநிலைபெற்றந
வரத்திநங்களைப்போல ஒளிருங்குந்தமாகு
ம் சூரபதுமனாகியமயில முருகக்கடவுளு
க்குவாகனமாகஆக்கியகுந்தமாகும் எ-று

இதுவுமது

இந்திரன்பன்மாறேவர் யாவர்க்குமு
தன்மையாக,வந்தபான்மையினற்சூல ம
ழுப்படையாத்தனர்க்கு,முந்திய நாமந்தா
னுமுதலியராகையாற்செங்,குந்தர்சந்ததி
க்குமப்பேர்முதலியனென்றுகூறும் (உக)

இ-ள் இந்திரன் பிரமன் விஷ்ணு
முதலியதேவர்கள் யாவருக்குமுதன்மை
யாகஆதியிலெழுந்தருளிவந்ததன்மையால்
சூலமும்மழுவாய்தமுந் திருக்கையிலுடை
யபரமசிவனுக்குஆதிநாமம்முதலியனென்
று வந்ததாதலால் அம்மரபில்வந்த செங்கு
ந்தர்சந்ததிக்கும்முதலியனென்று அந்தநா

மத்தையே உலகங்கூறும். ஏ · று

இஃது செங்குந்தர்களுக்கு முதலிய வென்னும் நாமம்வந்ததற்குக்காரணங்கூறியது முதலியர்இக்காலத்து முதலியாரெனமரீஇற்று.

மூந்தைநோன்பினன் முருகவேண்
முசுகுந்தனுக்கொன்பான குமரனாத்தர,
அந்தவீரரிவ்வகிலம்வென் றிசை, தந்தருத்த
வித்தகு செங்குந்தமே. (௫௰)

இ · ள். ஆதியில்சஷ்டிவிரதம்முறைமையாகச்செய்தமையால் அந்தமுசுகுந்தனென்னுஞ் சக்ரவர்த்திக்குமுருகக்கடவுள் பிரத்தியக்ஷமாகித்தனது படைத்தலைவர்களாகியவீரவாகுதேவர் முதலியவொன்பதின்மரையுங்கொடுக்க அந்தவீரர்களிவ்வுலகத்திலுள்ள அரசர்களையெல்லாஞ்செயக்கொண்டுபுகழைநிலைபெறச்செய்த குந்

தராவர் அவர்கள் சந்ததிகளேஇந்நட்பெ
ருமைபொருந்திய செங்குந்தர் ௭ - து.
இஃது முசுகுந்தச்சக்கிரவர்த்தித
வஞ்செய்து மூரு க்கடவுளால் நவவீரரை
ப்பெ பற்றென்பதூஉம் அந்நவ்வீரர்க
ள் சந்ததிகளே இச்செங் குந்தத்தலைவர்க
ளென்பதூஉங்கூறியது.

விண்டுமொர்பத்திடை யிருந்தி லேவலைக்
கொளிபணிமாறப், பண்டுபூசித்திடுங்கா
லையாகண்டலன்போய்ப் பாற்சுடலின், வ
ண்டுமூய்மாயனை வணங்கிவானிற்பழிச்சு
ந்தியாகனைமேற்கொண்டுபோந்து பாரி
ல் முசுகுந்தர்க்குதவுஞ்செங்குந்தம். (௫௧)

இ - ள். பூர்வத்தில் திருமாலானவர்
தியாகராயரைத்தன்மார்பின்கண் ணிருந்த
குளச்செய்யது பாற்சமுத்திரத்திற் பிறந்த
இலக்குமிபணிசெய்யும்படி பூசித்திருக்கு

ங்காலத்தில் இந்திரன் ~~பால~~ வார்த்தலிரு சூரனால் துன்
பமடைந்து திருப்பாற்கடலிற்பள்ளிகொ
ண்டிருக்கும்வளப்பம் பொருந்தியதுளப
மாலையையுடையவிஷ்ணுவைவணங்கி அவ
ரால் அத்துன்பத்தைநீக்கிக் கொண்டதும
ன்றித் தியாகரையும் பெற்றுச்சுவர்க்கத்தி
ற்கொண்டுபோய்த்தான் பூசித்துவருங்கா
லத்து வலனென்னும் அவுணனோடு நெடு
நாளாகயுத்தஞ்செய்தும்அவனைப்புறங்கா
ணக்கூடாமையாற்பூமியின்கண் முசுகுந்த
ச் சக்கிரவர்த்திக்கறிவிக்க அவன்வீரவாகுதே
வர்முதலியதனதுசதுர் விதசேனைகளாலும்
அவனை யழித்தகாலத்து இந்திரன்மகிழ்ந்
து அவ்வீரர்களைப்பார்த்து நீங்கள் செய்தந
ன்றிக்கு என்பாலுள்ளபொருள்களில்வே
ண்டியது களைக்கேளுங்கள் கொடுப்பே
னென அழிந்துபோகு மற்றைபொருள்க
ளைவிட்டு அழியாததான அவனாத்மார்த்தமாய்
ப்பூசித்த தியாகரைக்கேட்க அதைக்கொ

டுக்கமனதில்லாமையால் விசுவகர்யாவினு
லாறுதியாகரைச்சிருஷ்டிசெய்வித்து ஒவ்
வொன்றாக கொடுக்க அஃதல்ல அல்லவெ
ன்றயறுத்துமூலவிக்கிரகத்தைக் கேட்கம
றுக்கக்கூடாமையால்அவனுத்மார்த்தத்தை
யுங்கொடுக்கப்பெற்று அரசனுகியமுசுகு
ந்தச்சக்ரவர்த்திக்குக்கொடுத்துத்திருவாரூர்
முதலியசத்த ஸ்தலங்களிலும்ஸ்தாபித்தது அ
வர்கள்கையிற்றங்கிய செங்குந்தம் ள் · று

இஃது செங்குந்தத்தலைவர்க்ள் சத்தகி
ரகராயுங்கொண்டுவந்து உலகத்தில் ஸ்
தாபித்தமை கூறியது.

பிள்ளையாருயிர்க் குறுந் துணையாக்
ணிப்பேறெய் துங்,கிள்ளையாரி வண்கொடு
வருகென் றுடலங் கிழிக், கொள்ளையாருயி
ரொரிநரகுறவடுங்கூற் றுயிர்நணிசோர வள்
ளியாவருநடுக்கச்சத்தர்கீழுருகமே செழித்
தொண்குந்தம். (௯௨)

இ·ள் முசுகுந்தச் சக்ரவர்த்தியின துய
ணையாயும் வீரவாகுதேவரது பெண் ணு
மாகிய சித்திரவல்லி யென்பவள் வளர்த்த
ன்னுயி க்குமிகுந்த துணையாகும்படியான
ஒப்பற்ற தவப்பேறைப் பெற்ற கிளிப்பிள்
ளையை உமது தூதர்கள் திருடிப்போயின
தாக்கேட்டோமதை இந்தக்ஷணமே யீங்கு
கொண்டு வரக்கடவாயென்று இதைக
கூறிய யாவருமடுநடுங்கும்படி வீரத்தைச்
செலுத்தி உலகத்திலுள்ள உயிர்களுடைய உ
